# நானிலத்தில் முல்லை

நிலத்தின் இயற்கை அமைவு, காலநிலை என்பவற்றின் அடிப்படையில் பழந்தமிழர் தாம் வாழ்ந்த நிலத்தை நான்காக வகுத்துள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாகும். ஒவ்வொரு நிலத்திலும் பெருமளவில் பூக்கும் மலர்களின் பெயர்களையே அவற்றுக்குச் சூட்டினர். மலையும் மலைசார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும் காடும் காடுசார்ந்த இடத்தை முல்லை என்றும் வயலும் வயல் சார்ந்த இடத்தை மருதம் என்றும் கடலும் கடல் சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் அழைத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வம், தொழில், உணவு, கலை, விலங்கு,பறவை என்பன வேறுபட்டிருந்தன.

குறிஞ்சி நிலத்தின் தெய்வம் - முருகன். மக்கள் - குறவர். அவர்களது தொழில் தேன் சேகரித்தல், வேட்டையாடுதல், தினை விதைத்தல். தேனும் தினைமாவும் அவர்களது உணவு. இந் நிலத்திற்குரிய பறவைகள் - மயில், கிளி. விலங்குகள் - வேங்கை, யானை. குரவைக்கூத்து இவர்களது கலை.

மருத நிலத்தின் தெய்வம் - இந்திரன். மக்கள் - வேளாளர். தொழில் - உழவு. நெல்லரிசி, மீன், ஆனைந்து என்பன அவர்களது உணவு. பறவைகள் - நீர்ப்பறவைகள். விலங்கு - எருமை. கலை - கூத்துவகை

நெய்தல் நிலத்தின் தெய்வம் - வருணன். மக்கள்-பரதவர். மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் அவர்களது தொழில். அரிசி, மீன் அவர்களது உணவு. பறவை - கடற்காகம். விலங்கு - சுறா. கலை - பரதம்.

முல்லை நிலத்தின் தெய்வம் - மாயோன். மக்கள் - ஆயர். ஆனிரை மேய்த்தல், ஆனைந்து ஆக்கல், அவர்களது தொழில். கூலங்கள் ஆனைந்து வேட்டைப் புலால் உணவு. வாகைமரம் இந் நிலத்தின் சிறப்புக்குரிய மரம். இதன் மலர் தமிழரின் வெற்றியுடன் தொடர்புடையது. செண்பகம் முல்லை நிலத்தின் நிலையான பறவையாகும். இது எந்நிலையிலும் தான் வாழும் மண்ணை விட்டு வேறு எங்கும் போகாது. இது எமது தேசியப் பறவையாகும். புறா, காட்டுக்கோழி போன்ற பறவைகளும் மான், மரை, முயல் போன்ற விலங்குகளும் இங்கு அதிகமாகக் காணப்படும். இவர்களது கலை - ஆய்ச்சியர்குரவையாகும்.